3L
1894.9.8
189549

பொருளடக்கம்.

திருப்புகழ் ருதிபுலா ௱௪௫
அலங்காரம் நீசகுமிழிக்கு ௱௫௩ கற்பு முத்துவல்லி ௱௫௯

உ

ஓம் குஹாய நம:

"திருப்புகழமிர்தம்" சந்தா விவரம்.

ஆண்டு 1-க்கு தபாற்கூலி யுள்பட } இந்தியா, சிலோன், ... ரூ. 2-0-0
தனிப்பிரதி கிடைக்காது.

1. சந்தாதாரராகச்சேருகின்றவர்கள், ஆண்டுக் கட்டணத்தை முன்னதாகவே மணியார்டர் அநுப்பவேண்டும். மணியார்டர் கூபனில் தங்கள் முழு விலாசத்தையும் தெளிவாக எழுதி யநுப்ப வேண்டும்.

2. நமது பத்திரிகை ஒவ்வொரு சித்திரையினின்றே தொடங்கும். ஆதலால், நேயர்கள் எந்தத் திங்களில் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவ்வாண்டு சித்திரையினின்றே இதழ்கள் அநுப்பப் படும். ஒரு ஆண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது.

3. இதழ் கிடைக்கப்பெறாத சந்தா நேயர்கள், அத் தமிழ்த் திங்கள் 10 உ க்குள் எழுதிப் பெறவேண்டும். அதற்குமேல் எழுதுவோர் பணஞ் செலுத்திப் பெறவேண்டும். இதழ் கிடைக்கப் பெறாதவர்கள் தமது ஊர் தபாலதிகாரிகளுக்குந் தெரிவிக்க வேண்டும்.

4 விலாசமாறுவோர், தமது மாறுதல் விலாசத்தை உரிய காலத்திற்குள் நமது காரியாலயத்திற்கும், போஸ்டாபீசுக்கும் தெரிவிக்கவேண்டும் இன்றேல் பழைய விலாசத்திற்கே அடுத்த இதழ் அநுப்பப்படும். அதற்கு யாம் பொறுப்பாளியல்ல.

ஆறுபடை வீட்டுப்படம்.

வழிபாட்டிற்கு உரியது. ஆறுபடைவீட்டு ஆண்டவனையும் ஒருங்கே வழிபட்ட பலனையளிக்கும் அரிய தரு ஓவியம். கண்ணைக்கவரும் கவின்பெற்று மிளிர்வது. விலை 25-க்கு (தபாற்கூலியுள்பட) ரூ. 6-14-0 இருபத்தைந்துக்கு குறைந்தது தபாலில் அனுப்ப இயலாது. நமது ஏஜண்டுகளிடமுங் கிடைக்கும்

திருப்புகழமிர்தம் காரியாலயம்,
காங்கேயநல்லூர் P.O. Via காட்பாடி. N. A.

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் க. Vol 9.	தாரண. ஆடு கார்த்திகை மீ 1௨ நவம்பர் 1944	இதழ் அ. No 8.

திருப்புகழ்.

திருவானைக்கா.

குருதிபு லாலென்பு தோல ரம்புகள்
கிருமிகள் மாலம்பி சீத மண்டிய
குடர்நிணம் ரோமங்கள் மூளை யென்பன போகிகாயக்-

குடிலிடை யோரைந்து வேட ரைம்புல
அடவியி லோடுந்து ராசை வஞ்சகர்
கொடியவர் மாபஞ்ச பாத கஞ்செய அதனாலே;

சுருதிபு ராணங்க ளாக மம்பகர்
சரியைக்ரி யாவண்டர் பூசை வந்தனை
துதியொடு நாடுந்தி யான மொன்றையு முயலாதே-

சுமடம தாய்வம்பு மாலகோ ளுந்திய
திமிரரோ டேபுந்த மாய் வருந்திய
துர்சற ஆனந்த வீடு கண்டிட அருள்வாயே;

ஒருதனி வேல்கொண்டு நீள்க்ர வுஞ்சமும்
நிருதரு மாவுங்க லோல சிந்துவும்
உடைபட மோதுங்கு மார பங்கய கரவீரா-

உயர்தவர் மாவும்ப ரான அண்டர்கள்
அடிதொழு தேமன்ப ராவு தொண்டர்கள்
உளமதில் நாளுங்கு லாவி யின்புற வுறைவோனே;

கருதிய ஆறங்க வேள்வி யந்தணர்
அரிகரி கோவிந்த கேச வென்றிரு
கழல்தொழு சீரங்க ராச னண்புறு மருகோனே-

கமலனு மாகண்ட லாதி யண்டரு
மெமது பிரானென்று தாள்வ ணங்கிய
கரிவனம் வாழ்சம்பு நாதர் தந்தருள் பெருமாளே.

பதவுரை.

நீள் க்ரவுஞ்சமும் – மாயையினால் நீண்ட கிரவுஞ்ச மலையும், நிருதரும் - தாரகாதி யசுரர்களும், மாவும் - மாமரமாக முளைத்த சூரபன்மனும், கலோல சிந்துவும்-ஒலிக்கின்ற கடலும், உடைபட-உடைபட்டொழிய, ஒரு தனி வேல் கொண்டு - ஒப்பற்ற சிறந்த வேலாயுதத்தைக்கொண்டு, மோதும் - மோதிய, குமார - குமரக் கடவுளே! பங்கய கர - தாமரை மலர் போன்ற கைகளை யுடையவரே! வீரா – வீரரே! உயர் தவர்-உயர்ந்த தவ சீலர்கள், மா உம்பர் ஆன அண்டர்கள் - பெருமை தங்கிய தேவர்களாகிய வானவர்கள், அடி தொழுதே மன்பராவு தொண்டர்கள்–இறைவ ராகிய உமது திருவடியைத் தொழுது நிலைபேறுடன் துதிக்கின்ற அடியார்கள் என்னும் இவர்களின், உளம் அதில் - உள்ளமாகிய கோயிலில், நாளும் குலாவி – பிரியாமல் என்றுங் கலந்து, இன்பு உற உறைவோனே - இன்பம் அடைய வாழ்பவரே! கருதிய ஆறு அங்க – ஆன்றோர்கள் எண்ணி நிச்சயித்த ஆறு அங்கங்களை யுணர்ந்தவரும், வேள்வி அந்தணர் - தழல் ஓம்புபவரும் தணிந்த சிந்தையுடையவருமாகிய உத்தமர்கள், அரி அரி கோவிந்த கேசவ என்று - அரிகரீ! கோவிந்தா! கேசவா! என்றுந்துதித்து, இரு கழல் தொழுது - இரண்டு திருவடிக் கமலங்களையுந் தொழுகின்ற, சீ ரங்க ராசன் – ஸ்ரீரங்க ராஜராகிய திருமால், நண்புஉறு மருகோனே - நட்பு கொள்கின்ற மருகரே! கமலனும் – பிரமதேவனும், ஆகண்டல ஆதி அண்டரும் – தேவேந்திரன் முதலிய தேவர்களும், எமதுபிரான் என்று – எங்கள் தம்பிரான் என்று துதி செய்து, தாள் வணங்கிய – திருவடிமலர்களைப் பணியும் தனிப்பெருந் தலைவரும், கரி வனம் வாழ் சம்பு நாதர் - திருவானைக்கா என்னுந் திருத்தலத்தில் வாழ்கின்றவரும் வெண்ணாவலின் கீழ் எழுந்தருளியவருமாகிய சிவபெருமான், தந்து அருள் –

பெற்றருளிய, பெருமாளே - பெருமையிற் சிறந்தவரே! குருதி - உதிரமும், புலால் – தசைகளும், என்பு - எலும்புகளும், தோல் - தோலும், நரம்புகள்-நரம்புகளும், கிருமிகளும் – புழுக்கள், மால் அம்பி சீதம் அண்டிய குடர் – மயக்கம் நிறைந்த கூடைபோல் குளிர்ச்சியாகிய நோய் நெருங்கிய குடல், நிணம் – கொழுப்பு, ரோமங்கள் – மயிர்கள், மூளை - மூளை, என்பன பொதி காயம் - என்று சொல்லப்பட்ட இவைகள் நிறைந்து மறைந்துள்ள சரீரமாகிய, குடில் இடை - வீட்டிற்குள் இருந்து - ஐம்புல ஓர் ஐந்து வேடர் - மெய் வாய் கண் நாசி செவி என்ற ஐந்து புலன்களாகிய ஐந்து வேடர்களானவர், அடவியில் ஓடும் துராசை வஞ்சகர் - ஆணவக்காட்டில் ஓடித்திரிந்து கெட்ட ஆசையும் வஞ்சனையும் உடையவர்கள், கொடியவர் - கொடுமையானவர்களாகிய அந்த ஐவர்கள், மாபஞ்ச பாதகம் செய - பெரிய ஐந்து பாதகங்களைச் செய்ய, அதனாலே – அதனால், சுருதி - வேதங்கள், புராணங்கள் - புராணங்கள், ஆகமம் பகர் - சிவாகமங்கள் வகுத்துக் கூறுகின்ற, சரியை கிரியா - சரியை கிரியை என்ற வழிகள், அண்டர் பூசை - தேவபூசை, வந்தனை - வழிபாடு, துதியொடு – தோத்திரம், நாடும் தியானம் ஒன்றையும் - தனதாடு நாடுகின்ற தியானம் ஆகிய இவற்றுள் ஒன்றையும், முயலாதே - முயன்று அனுசரியாமல், சுமடம் அது ஆய் - அறிவின்மையை யுடையவனாய், வம்பு மால் கொளுந்திய-வம்பும் மயக்கமும் பற்றிய, திமிரரோடே பந்தமாய் வருந்திய - அகஇருளருடன் கூடி கட்டுப்பாடுற்று பிறப்பிறப்புள் அழுந்தி வருந்திய, துரிசு அற – குற்றம் அறவே நீங்கவும், ஆனந்த வீடு கண்டிட-ஆனந்தமயமாகிய முத்தி வீட்டைப் பெற்றுய்யவும், அருள்வாயே - அருள்புரிவீர்.

பொழிப்புரை.

மாயையினால் நீண்டு நின்ற கிரௌஞ்சமலையும், தாரகாதியவுணரும், மாமரமாகிநின்ற சூரபன்மனும், ஒலிக்கின்ற கடலும், சிறந்த ஒப்பற்ற வேற்படையைக் கொண்டு உடைபட்டொழிய மோதிப் போர்புரிந்த குமார மூர்த்தியே! தாமரை மலர் போன்ற கரங்களை யுடையவரே! வீரரே! உயர்ந்த மாதவ சீலர், பெருமை பொருந்திய வானவர்களாகிய தேவர்கள், இறைவராகிய உமது பாதகமலங்களை வணங்கி நிலைபேறுடன் துதிக்கின்ற தொண்டர்கள் ஆகிய இவர்களின் திருவுள்ளக் கோயிலில் என்று மகலாது கலந்து இன்புறுமாறு வசிப்பவரே!

ஆன்றோர்களால் சிறந்தவையென்று எண்ணிய ஆறங்கங்களையும் தவ வேள்வியையும் உடைய அந்தணர்கள் "அரிகரி! கோவிந்த! கேசவ!" என்று துதித்து இரு திருவடிகளையும் தொழுகின்ற ஸ்ரீரங்கராஜராகிய பொன்னரங்கப்பெருமான் நட்பு கொள்கின்ற மருகரே! பிரமதேவனும் இந்திராதி யிமையவரும் "எமது கடவுள்" என்று உரிமையுடன் கூறித் துதித்து திருவடிகளை வணங்குகின்ற, திருவானைக்காவில் எழுந்தருளியுள்ள சம்புநாதர் பெற்றருளிய பெருமிதம் உடையவரே! உதிரம் தசை எலும்பு தோல் நரம்பு புழுக்கள் மயக்கம் நிறைந்த கூடைபோல் சீத நோய், குடல் கொழுப்பு மயிர் மூளை என்ற இவைகள் நிறைந்து மறைந்துள்ள இவ்வுடம்பாகிய சிறிய வீட்டிற்குள் வாழுகின்றவரும், ஆணவக்காட்டில் ஓடித்திரிபவரும், கெட்ட ஆசையும் வஞ்சனையும் உடையவரும், கொடியவருமாகிய ஐம்புல வேடர்கள், ஐம்பெரும் பாதகங்களைப்புரிய, அதனல், வேதம், புராணம், ஆகமங்கள் கூறும் சரியை கிரியை முதலிய நெறிகள், தேவதா பூஜை வந்தனை வழிபாடு, தோத்திரம் தியானம் சமாதி ஆகியவைகளில் ஒன்றையும் முயற்சிசெய்து அனுசரிக்காமல், அறிவின்மையுடன் வம்பும் மயக்கமுமுடைய கீழ்மக்களுடன் உறவுகொண்டு வீடுபேறின்றி வருந்திய அடியேன் குற்றமற்று ஆனந்தானுபவ சுகவீடு பெற்றுய்யத் திருவருள் புரிவீர்.

விரிவுரை.

குருதி புலாலேன்பு..............போதிகாயம் :—

இவ்வுடம்பை நிலைபேறுள்ளதாகவும், மிகச் சிறந்த பொருளாகவும், அழகிய அற்புதப் பிண்டமாகவும் கருதி, உடம்பைப் பேணுவதிலேயே வாணாள் முழுவதுங் கழித்து அவமே யழியும் அறிவிலிகள், தெளிந்து தேறி உடம்பின் அசுத்தத்தையும், நிலையின்மையையும் உணர்ந்து, உடம்புள்ளபோதே உடம்புக்குள் உறையும் உத்தமனைக்காண முயற்சிக்கவேண்டும் என்ற குறிப்பில், நமது சுவாமிகள் உடம்பின் அருவருப்பைக் கூறுகின்றார்.

உதிரம், தசை, எலும்பு, தோல், நரம்பு, புழு, சீதம், குடல், கொழுப்பு, மயிர், மூளை முதலியவைகள் சேர்ந்து ஒரு உடம்பாக அமைந்துள்ளது.

இதன் அருவருப்பை நமது இராமலிங்க அடிகள் கூறுமாறு காண்க.

புன்புலா லுடம்பினசுத்தமு மிதனிற் புகுந்து நானிருக்கின்ற
புணர்ப்பும்
என்பொலா மணியே எண்ணிநானெண்ணி ஏங்கிய ஏக்கநீ
யறிவாய்
வன்புலா லுண்ணு மனிதரைக்கண்டு மயங்கியுள் நடுங்கி
யாற்றுமல்
என்பெலாங் கருக இளைத்தனனந்த இளைப்பையு மையநீ
யறிவாய்.

இதில் தந்தையின் கூறு.

1. நாடியும் நாளமும் நவில் இள எலும்பும்
வெள்ளை நீரும் வெள்ளிய பற்களும்
தலைமயிர் நகமுமத் தந்தையின் கூறும்.

தாயின் கூறு.

2. சிறிய குடலும் சிவப்பு நீரும்
மருவிய கொழுப்பும் மன்னும் ஈரலும்
நுவல் நுரை ஈரலும் நோக்குமிதயமும்
தசையு நிணமும் தாயின் கூறும்.

உயிர்க்குணம்.

3. அறிவும் ஆக்கமும் ஆழ்ந்த நோக்கமும்
இன்பமுந் துன்பமும் இனிய வாழ்க்கையும்
உயிரின் குணமென உரைப்பர் நூல்வலோர்.

உணவின் சாரம்.

4. உடலின் அமைப்பும் ஒள்ளிய நிறமும்
ஆடலும் ஆண்மையும் அமைந்தநிலையும்
நாணமும் மடமும் நான்ற கொள்கையும்
உணவின் சாரமென் றுரைப்பர் நூல்வலோர்

—உடல்நூல்.

குடிலிடை யோரைந்து வேடர் :—

இந்த உடம்பாகிய வீட்டில் ஐம்புல வேடர் வாழ்கின்றனர். அவர்கள் செய்யும் அநியாயம் அளப்பில.

புலன்களை வேடர் என்பது தொன்றுதொட்டு வந்த ஆன்றோர் வழக்கு.

> ஐம்புல வேடரின் அயர்ந்தனை ; வளர்ந்தெனத்
> தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்
> டன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே
>
> சிவஞானபோதம். சூத்திரம் 8.

சுருதி புராணங்கள்...........ஒன்றையு முயலாதே :—

ஆவியீடேறுதற்குரிய நெறிகள், வேதாகமங்களைக் கற்றல, அதன் வழி நிற்றல், சரியை கிரியை நெறிகளில் வழுவாது சிவபூஜை செய்தல், உள்ளம் குழைந்து துதித்தல், தியானம் புரிதல் முதலியன. இவற்றுள் ஒன்றை யேனும் பின்பற்றி அதனை மேற்கொண்டு முயன்று சாதித்தல் வேண்டும். (முத்தி யடைதல் வேண்டும்.)

சுமடமதாய்.........திமிரர் :—

அறிவென்பது அணுவளவேனுமின்றி உலக வாழ்வில் மயங்கி உள்ளம் இருண்டு உணர்வு மருண்டு கெடுந் தீயோருடன் கலப்பது மிகப் பெரிய கேட்டைத் தரும். தீயார் நட்பே தீவினை கட்கெல்லாம் முதற்காரணம்.

ஒவ்வொரு அறத்திற்கும் ஒவ்வொரு அதிகாரஞ் சொல்லிய தெய்வப்புலவர் நட்பு என்ற அறம் ஒரு அதிகாரத்தில் அடங்காமை கண்டு, நட்பு, நட்பாராய்தல, பழைமை, தீநட்பு, கூடாநட்பு என்று ஐந்து அதிகாரத்தால் விளக்கினர். ஆதலினல் தீநட்பைவிட்டு நல்லாரிணக்க முற்று நன்மை பெறவேண்டும்.

ஆனந்த வீடு கண்டிட அருள்வாயே :—

துன்பமென்பது ஒரு சிறிது மில்லாததும், இன்ப மயமாக விளங்குவதுமாகிய பரகதியைத் தருமாறு முருகனை வேண்டுகின்றனர். அப்பரமபதி பரகதியாகவும், பரகதிக்குத் தலைவனுகவும் விளங்குகின்றனர்.

> " தெரிசனபரகதி யானய் நமோநம "
> " கதிக்கு நாத னீ யுனைத் தேடியே புகழ் உரைக்கும் "
>
> —திருப்புகழ்.

உயர்தவர்......உளமதில் நாளும்......உறைவோனே :—

இறைவன் அடியார்கள் உள்ளத்தில் என்றும் பிரியாது வீற்றிருப்பர்.

போதுவார் நீறணிந்து பொய்யாத ஐந்தெழுத்தை
ஓதுவார் உள்ளம் எனவுரைப்பார்—நீதியார்
பெம்மான் அமரர் பெருமான் ஒருமான்கை
அம்மா னின்றுடும் அரங்கு —புகழேந்தி.

கருதிய ஆறங்கம் :—

அங்கம் ஆறு என்ப. வேதாங்கம் எனப்படும். நமது உடம்புக்கு காது, கண், நாசி, வாய், கை, கால் என ஆறு அங்கங்கள் உளவாபோல் வேதபுருஷனுக்கும் நிருக்தம், ஜோதிஷம், சிக்ஷை, வியாகரணம், கல்பம், சந்தஸ் என்ற ஆறு அங்கங்களும் ஆறு உறுப்புக்களாம்.

1. நிருக்தம் :— காது ; இது நிகண்டு ; ஏன் இந்தப் பதம் இங்கு வந்தது என்பதை விளக்குவது. உதாரணமாக. ஹ்ருதயம், ஹ்ருதி - அயம் ; இருதயத்தில் இவன் இருக்கின்றான் என்பது பொருள். பரமாத்மா நிவசிப்பது என்பது போன்ற காரணங்களை விளக்குவது.

2. ஜோதிஷம் :— கண் ; கண் சேய்மையிலுள்ளதைத் தெரிவிப்பதுபோல் ஜோதிஷம் மேல்விளைவிப்பதைத் தெரிவிக்கும். ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் வரும் சூரிய சந்திர கிரகணங்களை இப்போதே தெரிவிக்கும்.

3. சிக்ஷை :— நாசி; இது எழுத்துக்களின் உச்சாரணம், மாத்திரை, உற்பத்தி முதலியவைகளை வரையறுத்துக் கூறுவது.

4. வியாகரணம் :— வாய்; இது இலக்கணம் போல்வது. நடராஜப்பெருமானது நிருத்தமுடிவில் டமருகத்தில் எழுந்த 14 சப்தங்களையே 14 சூத்திரங்களாக பாணினி எழுதினார். அதுவே வியாகரணத்திற்கு மூலம். பாணினி சூத்திரத்திற்குப் பதஞ்சலி பாஷ்யம் எழுதினார். பதஞ்சலி சிவ

பெருமான் திருவடியில் இருப்பவர். எனவே சிவபெருமானுடைய மூச்சுக்காற்று வேதம்; கைக்காற்று வியாகரணம்; கால்காற்று பாஷ்யம்.

5. கல்பம் :— கை; கருமங்களைச் செய்வதற்குக் கரம் என்று பெயர். நல்ல கருமங்களை இது வரையறுத்துக் கூறுகின்றது. இன்ன இன்ன கருமங்கட்கு இன்னார் உரியவர்; இன்ன கருமத்திற்கு இன்னமந்திரம், இன்ன திரவியம், ரித்விக்குகளின் இலக்கணம், பாத்திரங்களின் அமைப்பு இவைகளை விளக்குவது.

6. சந்தஸ் :— கால்; யாப்பு போல்வது. இன்ன இன்ன பாடலுக்கு இத்தனை அட்சரம்; இத்தனை அடி; இத்தனை மாத்திரையென்று வரையறுப்பது. இவையில்லாமல் நிற்கமுடியாது ஆதலினால் இது கால் எனப்படும்.

வேள்வியந்தணர் :—

கொலை புலைகள் இல்லாத தவவேள்விகளைப் புரியும் அந்தணாளர். அந்தணர் - தணிந்த சிந்தையை யுடையவர்; இன்னும் வேதத்தின் அந்தத்தை அணவுவோர் (பெருந்துபவர்) என்றும் பொருள்படும். இத்தகைய சிறந்த அந்தணர்களால் பணியப்படுகின்ற திருவரங்க மேவும் தெய்வமாகிய நாராயணமூர்த்தி நண்பு கொள்கின்ற மருகர் முருகர்.

கமலனும்........எமதுபிரான் என்று தாள் வணங்கிய :—

பிரமாதி தேவர்கள் யாவரும எங்கள் பெருமான் என்று உரிமையுடன் தொழுது வழிபடுகின்ற தெய்வ சிகாமணி முருகக்கடவுளாவர்.

கருத்துரை.

வேலாயுதரே! அடியார் உள்ளத்தில் உறைபவரே! திருமால் மருகரே! திருவானைக்காவில் வாழ்பவரே! ஐம்புல வேடரால் அயர்ந்து வீண்போகாமல் அடியேனுக்கு இன்ப வீடாகிய பரகதியை யருள்புரிவீர்.

ஓம் குஹாய நம:

கந்தரலங்காரம்

(௱௩௬-ம் பக்கத் தொடர்ச்சி.)

நீர்க்குமி ழிக்கு நிகரேன்பர் யாக்கை நில் லாதுசெல்வம்
பார்க்கு மிடத்தந்த மின் போலு மென்பர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங் கேனு மெழுந்திருப்பார்
வேற்கும ரர்க்கன் பிலாதவர் ஞான மிகவுநன்றே. (66)

பதவுரை.

யாக்கை - இவ்வுடம்பானது, நீர் குமிழிக்கு நிகர் என்பர் - நீரில் எழுகின்ற குமிழிக்கு ஒப்பாகும் என்று கூறுவார்கள், செல்வம் நில்லாது - பொருட் செல்வமானது நிலை பெற்றிராது, பார்க்கும் இடத்து - ஆராய்ந்து பார்க்குங்கால், அந்த மின் போலும் என்பர் - அந்த மின்னலைப்போன்றது என்று வாயினாற் கூறுவார்கள்; பசித்துவந்து ஏற்கும் அவர்க்கு - மிகவும் பசியினால் வாடி வந்து "ஐயா! இத்தனை அன்னங் கொடுங்கள்" என்று யாசிப்போர்கட்கு, இட என்னின் - ஏதாவது கொடுக்கவேண்டும் என்றால், எங்கேனும் எழுந்திருப்பார்-எங்கேயாகிலும் போய்விட எழுந்திருப்பார்கள், வேல் குமரர்க்கு அன்பு இல்லாதவர் - வேலாயுதத்தையுடைய குமாரக் கடவுளுக்கு பக்தி இல்லாதவரது, ஞானம் மிகவும் நன்று - அறிவு மிகவும் நன்றாக இருக்கின்றது.

விரிவுரை.

இந்தப் பாடலில் சுவாமிகள் செயலில் நடந்துகாட்டாமல் வெறும் வாய்ப்பந்த லிடும் வெற்றுரை வீணரை இடித்துரைக்கின்றனர். சொல்லுஞ் செயலும் ஒத்து நடப்பவரே உத்தமராவர். எல்லோருக்கும் உபதேசஞ் செய்துவிட்டு தாங்கள் அங்ஙனம் நடக்கவில்லையானால் அவர்களை மக்கட்பதடி என்று கூறவேண்டும். அவர்களைக் கண்டு மரங்கள் கூட நகைக்கும். அவர்களுடைய மடமையை என்னென்றுரைப்பது?

நீர்க்குமிழிக்கு நிகரென்பர் யாக்கை :— உடம்பானது நீரில் தோன்றி மிக விரைவில் அழியும் குமிழிக்கு நிகரானது என்று யாக்கை நிலையாமையைப் பற்றிப் பேசுவர்.

நீரின் எழுத்தாகும் யாக்கை —குமரகுருபரர்.

பட்டினத்தடிகள் இவ்வுடம்பின் நிலையின்மையை இனிது கூறுமாறு காண்க.

" காலெதிர் குவித்த பூளை, காலைக்
கதிர் எதிர்ப்பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத் தியங்கும் இந்திர சாபம்
அதிரு மேகத் துருவி னருநிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண் துயில் கனவில் கண்ட காட்சி "
" ஐந்துவித மாகின்ற பூத பேதத்தினால்
ஆகின்ற யாக்கை நீர் மேல்
அமிழ்கின்ற குமிழி "
" நீர்க்குமிழி பூணமைத்து நின்றாலும் நில்லா மெய்
பார்க்கு மிடத் திதன்மேற் பற்றறுவ தெந்நாளோ "

(செல்வம்.............மின்போலும் :—

செல்வம் - நிலைத்திருக்காமல் போவோம் என்று பொருள்படுமாறு காண்க. செல்வம் யார்மாட்டு நிலைத்திராது. உருண்டுகொண்டே யிருக்கும். அதனாலேயே நாணயங்களை பழைய அறிஞர்கள் வட்ட வடிவில் அமைத்தனர் போலும்.

" அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும் " —நாலடியார்.

மின்னல் எப்படி காட்டி மறைகின்றதோ அது போல் செல்வம் உள்ளதுபோல் இருந்து கள்ளமாய் மறையும். ஆதலினால் கைத்துண்டாம்போதே கரவாதறஞ் செய்தல் வேண்டும்.

" தேரிற் பரியிற் கரியிற் றிரிபவர் செல்வமெல்லாம்
நீரிற் பொறியென் றறியாத பாவி நெடு நெஞ்சமே "

என்றார் பிறிதோரிடத்திலும்.

பற்றறுத்து பற்றற்றான் பற்றினைப் பற்றி பரகதி புக முயற்சி செய்வோர் யாக்கை நிலையாமை செல்வம் நிலை

யாமையை அடிக்கடி சிந்திக்க[illegible] திருவள்ளுவர் வீடுபயக்கும் உணர[illegible]ஞானத்தைக் கூறத் தொடங்கியபோது "நிலையாமை" என்ற அதிகாரத்தை முதற் கண் கூறுவாராயினர்.

> நில்லாதவற்றை நிலையின வென்றுணரும்
> புல்லறி வாண்மை கடை.

என்றார்.

நாள்தோறும் இறந்துபட்டொழிவோரைக் கண்டும் "நாம் நீடூழி வாழ்வோம்" எனக்கருதும் மதியிலிகளை என்னென்றுரைப்பது?

> "போனவர் வாழ்வுகண்டும் ஆசையிலேயமுந்தும் மயல்தீர"
> —திருப்புகழ்.

> நேற்றுளார் இன்று மாளாநின்றனர் அதனைக்கண்டும்
> போற்றிலேன் நின்னை அந்தோ போக்கினேன் வீணேகாலம்
> ஆற்றிலேன் அகண்டானந்த அண்ணலே அளவில் மாயைச்
> சேற்றிலே இன்னம் வீழ்ந்து திளைக்கவோ சிறியனேனே.
> —தாயுமானர்.

ஆதலினுல் யாக்கையுள்ளபோதே தவமும் செல்வமுள்ளபோதே தருமமும் செய்தல் வேண்டும்.

பசித்து வந்தே ஏற்குமவர்க்கிட வென்னின்....எழுந்திருப்பர்:—

மேலே கூறியவாறு யாக்கை நிலையாமையைப்பற்றியும், செல்வ நிலையாமையைப்பற்றியும் மிக விரிவாகவும் தெளிவாகவும் கல்லுங் கரையுமாறு சிலர் பேசுவர்; ஆனல் செய்கை யிராது. யாராவது ஒரு ஏழை பசியுடன் வந்து "ஐயா" என்று கையேந்திக் கேட்டால் அவர் சத்தம் போடாமல் எங்கேனும் எழுந்துபோய் மறைவர். அந்தோ! இவர்களுடைய பேச்சு ஏச்சாக முடிந்தது. இதற்குக் காரணம் அன்பின்மையே.

வேற்குமரற் கன்பிலாதவர் ஞானம் மிகவு நன்றே :—

ஆதலினுல் முருகனிடத்தில் அன்பின்றி உயிர்களிடத்து இரக்கமின்றி வாசாவாகப் பேசுவார் ஞானம் மிகவும் நன்ருக இருக்கின்றது? என்று இகழ்கின்றனர்.

கற்பு.

முத்துவல்லி.

பூங்குடி என்ற ஊர் மிகவும் வளமுடையது: ஆற்றங்கரையில் அவ்வூர் அமைந்திருந்தது. சோலைகளில் சுரும்புகளும் வயல்களில் கரும்புகளும் இனிமையாக வளர்ந்தன. நல்லவர்கள் அதில் வாழ்ந்திருந்தனர். நல்லறமே சூழ்ந்திருந்தது. கூடலீசர் என்ற அறிஞர் ஒருவர் அவ்வூரில் வாழ்ந்தனர். அவர் சாந்தமும் சீலமும் உடையவர். அவருக்கு கயற்கண்ணி என்ற ஒரு தங்கையுண்டு

அன்பு ஒன்றுக்கே இறைவன் எளிதில் கட்டுண்பன் அன்பிலாத ஞானம் மணமிலாத மலர்போலாகும். அந்த அன்பு எல்லா வுயிர்கள் மாட்டும் நிகழவேண்டும்.

அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய் போற் போற்றாக் கடை.

என்றார் திருவள்ளுவர்.

கருமம், தவம், ஜெபம், சமாதி, ஞானம் ஆகிய இவைகளை மேற்கொண்டோரிடம் இறைவன் எளிதில் வெளிப்பட மாட்டான். அன்பு செய்வார் முன் எளிதில் வெளிப்படுவான். அவருடன் உரைசெய்வான்; அவருளத்தில் நீங்காது உறைவான்.

கருமமா தவஞ் செபஞ் சொல் காசறு சமாதி ஞானம்
புரிபவர் வசமதாகிப் பொருந்திடோம் புரை யொன்றின்றித்
திரிவறு மன்பு செய்வோர் வசமதாய்ச் சேர்ந்து நிற்போம்
உரைசெய்வோ மவர்மு னெய்தி யவருளத் துறைவோமென்றும்.

—வாயுசங்கிதை.

கருத்துரை.

இறைவனிடத்தும் ஏழைகளிடத்தும் அன்பில்லாத வாசாஞானம் பேசுவார்களுடைய அறிவு உண்மையறிவாக மாட்டாது.

அவனை அடுத்த ஊரில் ஒரு குணவந்தனுக்குக் கொடுத்திருந் தனர். கற்பொழுக்கத்திற் சிறந்த அம் மடவாளுக்கு அழகின் கொழுந்துபோல் ஒரு பெண்மகவு பிறந்தது. அக் குழவிக்கு முத்துவல்லி என்று பேரிட்டனர். அம் மகவு மிகவும் அருமை யாக வளர்க்கப்பட்டது. கூடலீசருக்கும் ஒரு பெண் மகவு பிறந்தது. அதற்கு வடிவழகி என்று பேரிட்டனர். முத்து வல்லிக்கு ஓராண்டு நிரம்பியது. கூடலீசருடைய தங்கை கயற்கண்ணியின் கணவன் திடீரென்று நோய்வாய்ப்பட்டு மண்ணுலகவாழ்வைத் துறந்தனர். தலையன்புடைய கயற்கண்ணி யும் அதே கவலையால் தன் இளங் குழவியை ஏங்கவிட்டு கணவ னுடன் விண்ணுலகஞ் சேர்ந்தனள். முத்துவல்லி இளம்பரு வத்திலேயே தாய்தந்தையரை யிழந்து தவித்தனள்.

கூடலீசர் தங்கை குழந்தை முத்துவல்லியைத் தன் வீட்டிற்கு கொணர்ந்து வளர்ப்பாராயினர். கூடலீசருக்கும் ஒரு பெண் உண்டென்று கூறினேமல்லவா? வடிவழகி என்னும் அக்குழந் தையையும் முத்துவல்லியையும் இரு கண்கள் போல் காப்பாற்றி வந்தார். ஆனல் கூடலீசருடைய மனைவி பொறாமையும் கோப மும் உடையவள். தன் மகள் கருமையாகவும் நாத்தனர் மகள் முத்துவல்லி சிவப்பாகவும் இருப்பதுகண்டு முத்துவல்லி மீது பொறாமை கொண்டாள். கணவன் இல்லாத வேளையில் அவளை நையப்புடைப்பாள். "எங்கிருந்தோ இந்தப்பீடை வந்து சேர்ந் தது: இதற்கு சாவு வராதா?" என்று வசைபாடுவாள். முத்து வல்லிக்கும் வடிவழகிக்கும் ஐந்து வயது ஆயிற்று. கூடலீசர் இரு வரையும் பள்ளிக்கு வைத்தனர். முத்துவல்லி மிகவும் அறிவுட னும் அக்கறையுடனும் கல்வி பயின்றுவந்தனள். வடிவழகி அறி யாமையும் அழுக்காறும் உடையவள். அவளுக்குப் படிப்பு என்றால் விடமாக இருந்தது. பள்ளிக்கூடம் நரகலோகம் போல் நடுக்கத்தைத் தந்தது. புத்தகத்தைக் கையிலெடுத்தால் தூங்கி விழுவாள். முத்துவல்லி தவறாமல் வருடந்தோறும் மேல் வகுப் புக்குப் போனாள். அதனால் கூடலீசர் முத்துவல்லியிடம் பட்ச மாக இருந்தனர். அதுகண்டு அவர் மனைவி மனம் புழுங்கினாள். ஓயாமல் முத்துவல்லியை வைவாள்; அடிப்பாள்; அரைவயிறு உணவுதான் தருவாள். அதுவும் பழையதும் கஞ்சியதுமாக இருக்கும். முத்துவல்லி அத்தனை வேதனைகளையும் பொறுத்துக் கொண்டு, தன் தலைவிதியை நொந்து கண்ணீரால் நனைவாள்.

ஒருநாள் இரவு; நல்ல நிலவு; வசந்த காலம்; தென்றல் இதமாக வீசிக்கொண்டிருந்தது. நிலாமுற்றத்தில் கூடலீசர் மகிழ்ச்சியாக வீற்றிருந்தனர். முத்துவல்லியும் வடிவழகியும்

இருபுறத்தில் நிலாச்சோறு சமைத்து விளையாடிக்கொண்டிருந்தனர். அப்பொழுது முத்துவல்லிக்கும் வடிவழகிக்கும் வயது பதினான்கு நிரம்பியிருந்தது. கூடலீசர் அவ்விருவரின் அறிவை பரிட்சிக்க எண்ணினார். இருவரையும் அழைத்து அருகில் இருத்தினார்.

"குழந்தைகளே! நீங்கள் இத்தனைகாலமாகப் படித்துக் கொண்டுவருகின்றீர்களே? நான் கேட்கும் கேள்விகட்குப் பதில் கூறுங்கள்" என்று கேட்பாராயினார்.

கூட:— ஒருவன் கவிபாடவேண்டுமானால் எதனால் பாடவேண்டும்?

வடிவழகி:— அப்பா! நாவினால் பாடவேண்டும்.

முத்துவல்லி:— அப்பா! அறிவினால் பாடவேண்டும்.

கூட:— மனிதன் நல்லசுகமாக சாப்பிடவேண்டுமானால் அதற்குக் காரணம் எது?

வடிவழகி:— அப்பா! நன்றாக உண்பதற்குக் காரணம் நாக்கு.

முத்துவல்லி:— அப்பா! நல்ல சுகமான உணவு உண்பதற்குக் காரணம் அவனுடைய உழைப்பு.

கூட:— உங்களுக்கும் மாடு முதலிய பிராணிகட்கும் என்ன வேற்றுமை?

வடிவழகி:— எங்களுக்கு இரண்டு கால்; அவைகட்கு நான்கு கால்.

முத்துவல்லி:— பகுத்தறிவில்லாதவை விலங்குகள். பகுத்தறிவுவுள்ளவர் மனிதர்.

கூடலீசர் முத்துவல்லியின் அறிவின் நுட்பத்தையும் வடிவழகியின் அறிவின்மையையுங்கண்டு சிரித்து. "சரி; போதும். ஒரு பாடலைச் சொல்லுகின்றேன். விரைவில் அதற்குப் பொருள் கூறுபவர் கெட்டிக்காரர்.

பண்புள்ருக் கோர்பறவை பாவத்துக் கோரிலக்கம்
நண்பிலரைக் கண்டக்கால் நாற்காலி—திண்புவியை
ஆள்வார் மதுரை யழகியசொக் கர்க்கரவம்
நீள்வா கனநன் னிலம்."

இதனைக்கேட்ட இருவரும் சிறிது நேரம் மௌனமாக இருந்தனர். வடிவழகி, "இது ஒன்றுமே புரியவில்லையப்பா!" என்றாள்.

முத்துவல்லி:— அப்பா! பண்பு உள்ருக்கு ஓர் பறவை - நல்லியல்புடையவர்கட்கு ஈ (கொடு); (பறவை-ஈ) பாவத்துக்கு ஓர் இலக்கம் - பாவத்தைச் செய்வதற்கு அஞ்சு; (ஒரு இலக்கம்-அஞ்சு) நண்பு இலரைக் கண்டக்கால் நாற்காலி - நட்பு இல்

லாதவரைக் கண்டபோது விலங்கு ; (நாற்காலி - விலங்கு) விலகிப்போகவேண்டும். திண்புவியை ஆள்வார் மதுரை அழ கிய சொக்கர்க்கு—வலி பெற்றபூமியை ஆளுகின்ற மதுரையழ கிய சோமசுந்தரக் கடவுளுக்கு, அரவம் — பணி, நீள்வாக னம் — விடை, நன்னிலம் — செய்; சிவபெருமானுக்குப் பணிவிடைசெய். "அதாவது நல்லவர்க்குத் தரவேண்டும் ; பாவத்திற்குப் பயப்பட வேண்டும் ; தீயவரைக் கண்டால் விலக வேண்டும் ; சிவபெருமானுக்குப் பணிவிடை செய்ய வேண்டும்"

என்று மிகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறினள். கூடலீசர் கேட்டு உள்ளங் குளிர்ந்தார். முத்துவல்லியின் அறி வின் திறத்தை நினைந்து மனம் மகிழ்ந்தார்.

அவளைத் தொட்டு உச்சி மோந்து முத்தமிட்டனர். அதே சமயத் தில் அவர் மனைவி வந்தனள். தன் மகளை யொழித்து சக்கி மகளிடம் அன்பு பாராட்டுவதைக்கண்டு அவள் கண்கள் சிவந் தன ; உதடு துடித்தது. உடம்பு காந்தியது. "ரொம்ப அழகு ; என்ன இவளிடம் கொஞ்சுகின்றீர் ; இந்த ஜெகஜாலக் கள்ளி யின் விஷயம் உங்களுக்குத் தெரியாது. இவள் பொல்லாதவள் ; மாயக்காரி" என்று வையத் தொடங்கினள். கூடலீசர் "சீ! ஏன் இப்படி கழுதைபோல் கத்துகின்றாய் ; அவள் அறிவின் கொழுந்து ; சாந்தசீலை ; அவள் குணக்குன்று ; அவள் பிற்காலத் தில் பெரிய பதவியில் வாழப்போகின்றாள். நீ பெற்றவைத் துள்ள அசட்டுப்பிண்டம் உதவாக்கரை ; உன்மாதிரி உன் மகளும் துர்க்குணக்குவியல்........" என்று சீறினார். அவ்வளவுதான் ; அவர் மனைவிக்கு அளவுக்கு மீறி பொறாமையும் கோபமும் வளர்ந்தன. ஏற்கனவே இருந்த அவைகள் பொங்கித் ததும்பின. கீழே இறங்கினள். அவளால் தாங்கமுடியாத ஆத்திரமும் க்ஷாத்திரமும் வர்தித்தன. "இனி நாம் சும்மா இருக்கக்கூடாது. இவளால் நமக்குக் கழுதை பட்டம் வேறே கிடைத்தது. இவளைத் தொலைத்தாலொழிய நமது மகளுக்கு வாழ்வு உண்டாகாது" என்று எண்ணினள். முத்துவல்லியைக் கொன்றுபோடவேண்டு மென்று தீர்மானித்தாள். பிறகு, தன் மகளிடம் தகவலைக்கூறி முத்துவல்லியை கிணற்றிலே தள்ளிவிடுமாறு ஏற்பாடுசெய்தாள்

ஒருநாள் முத்துவல்லியும் வடிவழகியும் விடுமுறை நாளில் ஊர்ப்புறத்திலுள்ள சோலையில் விளையாடிவிட்டு மாலை நேரம் திரும்பிவரும்போது வழியில் ஒரு பாழுங்கிணறு எதிர்ப்பட்டது. வடிவழகி, "முத்துவல்லி ! இதோ பார் ; இந்தக் கிணற்றில் தண்ணீர் எவ்வளவு ஆழத்தில் இருக்கின்றது" என்றாள். ஒரு

சிறிதும் களங்கமில்லாத முத்துவல்லி கிணற்றை எட்டிப் பார்த்தனள். உடனே வடிவழகி அவளைக் கிணற்றில் தள்ளிவிட்டு ஓடிவிட்டான். வீட்டிற்கு வந்து தன் தாயிடம் விஷயத்தைக் கூறினுள். அவள் கேட்டு புதையல் கிடைத்ததுபோல் மனம் மகிழ்ந்தாள். "இன்றோடு நமது பீடை தொலைந்தது" என்றுள்.

"முருகா! முருகா! முருகா!" என்று முத்துவல்லி கிணற்றில் விழுந்தாள். திருவருளால் வழிப்போக்கன் ஒருவன் ஏதோ கிணற்றில் ஒன்று விழுந்ததே என்று ஓடிவந்து பார்த்தான். மின்னற்கொடிபோல் முத்துவல்லி தண்ணீரில் தத்தளிப்பதைக் கண்டான். உடனே குதித்து அவளை யெடுத்து கரை சேர்த்தான். "அம்மா! நீ யார்? நீ எவ்வாறு கிணற்றில் வீழ்ந்தனை? உன்னை யாராவது தள்ளிவிட்டார்களா? உன் பேர் யாது?" என்று கேட்டான். முத்துவல்லி, "அண்ணு! நான் இந்த ஊர்தான். தாய் தந்தை யில்லாத தனியள்; ஆருமற்ற அநாதை. என்னை ஒருவருங் கிணற்றில் தள்ளவில்லை. என் வினைதான் என்னைத் தள்ளியது" என்று கூறி கண்ணீர் சிந்தி அவனை வணங்கி, "தயாளமுள்ள தருமசிலரே! உங்களுக்கு என் வணக்கம் உரித்தாகுக. தங்களைப்போன்ற உபகாரிகள் உலகில் இருப்பதனுல்தான் ஒழுங்காக சந்திரசூரியர் உதிக்கின்றனர். கடவுள் உமக்குக் கருணை புரிவார்" என்று நன்றியுரை சொல்லி நடந்தாள். அவளுடைய தேனினுமினிய மதுரமொழிகளைக் கேட்டு உள்ளம் உருகினுன்.

முத்துவல்லி, "தெய்வமே! கருணைக்கடலே! கந்தநாதா! நான் ஒருவருக்கும் ஒரு சிறிதும் தீங்கு மனத்தாலும் புரிந்ததில்லையே? என்னைக் கிணற்றிலே தள்ளுவதற்கு என்ன அபராதம் புரிந்தேன். நமது மாமியின் ஏவலாக இருக்கும். இனி அங்குபோனுலும் நிச்சயமாக நமக்கு உய்வு இராது. வீணே நம் பொருட்டு மாமியும் மாமனும் சண்டைபோட்டுக்கொள்கின்றனர். நாம் என்ன பாவஞ் செய்தோ தாய்தந்தையரை இளமையிலேயே இழந்தோம். நம்மால் ஒருவருக்குந் துன்பம் வேண்டா. இறந்து போனதாகவே நினைத்துக்கொண்டு மகிழட்டும்" என்று எண்ணி மனம்போனபோக்கில் சென்றுள். ஒரு பெரிய அடர்ந்த கானகத்தை யடைந்தாள். இருட்டிவிட்டது. ஒரே இருள். விலங்குகளின் ஒலியும் காற்றின் ஒலியும் முழங்கின. முத்துவல்லி உள்ளத்தில் பயம் தோன்றியது. "முருகா! முருகா!" என்று வாய் ஓயாது கூறி காலினுல் தடவிக்கொண்டே சென்றுள்.

அங்கொரு அம்பிகை கோயில் எதிர்ப்பட்டது. கரைகாணுக் கடலில் வீழ்ந்து தடுமாறுபவனுக்கு ஓர் தெப்பங் கிடைத்தது

போல் முத்துவல்லிக்கு அக்கோயில் கிடைத்தது. அதனுள் சென்று அங்குள்ள அம்பிகையைக் கண்டாள். மங்கலாக விளக்கெரிந்து கொண்டிருந்தது. மாலை நேரத்திலேயே அடுத்த ஊரிலுள்ள அர்ச்சகர் பூசித்துவிட்டுப் போய்விடுவார். முத்துவல்லி விளக்கைத் தூண்டினாள். அம்பிகையின் திருவுருவம் நன்கு புலப்பட்டது.

"அகிலாண்ட நாயகி! அருட்கடலே! தாயே! நீ என்னுண்டவனாகிய முருகப்பெருமானுடைய தாயல்லவா? உலகீன்ற உமையம்மையே! ஏழையாகிய யான் பண்டைப்பிறப்பிலே என்னபாவஞ் செய்தேனோ? இந்தப்பிறப்பில் ஒருவருக்குந் தீமை அணுவளவும் புரிந்ததில்லை. என் தாயையும் தந்தையையும் இளமையிலேயே இழந்தேன். அறிவுதோன்றிய நாள் தொட்டு சுகமென்பது அணுவளவும் தெரியாது என் மாமியால் இடிபட்டு நொந்தேன். அன்னையே! இனி இந்த உலகவாழ்வு எனக்கு வேண்டா. இப்போதே உன் திருவடிக்கு வருகின்றேன" என்று கல்லுங் கரையப்புலம்பி முறையிட்டு அம்பிகையின் திருவடியில் தலையை மோதப்போனாள். அவளுடைய மாசில்லாத மனத்திற்கும், அளவற்ற அன்பிற்கும் அம்பிகை திருவுளமிரங்கி வெளிப்பட்டுக் காட்சி தந்தனள். முத்துவல்லியைத் தடுத்து "அஞ்சேல்" என்று அருள்புரிந்தனள்.

> "காவி யனைய விழி கற்பகசி காமணியே
> பாவி தனையாள் பராபரையே - தேவியுயர்
> தங்கமலை வில்லார் தழுவுமனை யேகருணை
> தங்கமலை நின்றாள் சரண்"

என்று முத்துவல்லி பாடித்துதித்து, "அன்னையே! என்னையும் ஒரு பொருளாக எண்ணி ஆட்கொண்டனையே; நின்கருணையின் எளிமைதான் என்னே! உன திருவடியே சரணம்" என்று முறையிட்டனள். அம்பிகை "குழந்தாய்! கவலையை ஒழி; நமது கருணை உனக்குத் துணைபுரியும். நீ அரசியாக விளங்கி அளப்பற்ற போகங்களை நுகர்ந்து இன்பவாழ்வில் இனிது வாழ்வாயாக" என்று வாழ்த்தியருளினள்.

"முத்துவல்லி, தாயே! ஆருமற்ற அநாதையாகிய நான் அரசியாவேன என்று தாங்கள் வாழ்த்தினீர்; உமது பேரருளின் பெருமையை என்னென்று புகழ்வேன்; அந்த பாக்கியம் எனக்கு வருமோ?" என்று கண்ணீர் வடித்தாள். அம்பிகை "அம்மா! நாளையே நீ அரசியாவாய்; கண்களில் முத்துபோல் நீர் உதிர்க்கின்றனை; இனி அதற்குப்பதிலாக, நீ எப்போதும் சிரிக்கும் போதெல்லாம் உன வாயினின்றும் முத்து உதிரும். முத்துவல்லி என்ற நினபேர் காரணப் பேராகத் திகழும்" என்ற வரத்தைக் கொடுத்து அம்பிகை திருவுருக் கரந்தனள். முத்துவல்லி தனக்குக்

கிடைத்த எதிர்பாராத பாக்கியத்தையெண்ணி சிரித்தாள். உடனே அவள் வாயினின்றும் வெள்ளியதும் ஒளிவீசுகின்றது மாகிய முத்துக்கள் உதிர்ந்தன. இங்ஙனம் முத்துவல்லி சிறந்த வரத்தையும் தேவியின் திருவருளும் பெற்று அரமடந்தைபோல் விளங்கினுள். ஏற்கனவே இருந்த எழில் மெருகிட்டதுபோல் பிளிர்ந்தாள்.

முத்துவல்லியின் கவலை விடிந்ததுபோல் பொழுது விடிந்தது. கதிரவன் உதித்தான். தாமரைகள மலர்ந்தன; குமுதங்கள் குவிந்தன; பறவைகள் பாடின; மானகள் துள்ளியோடின. முத்துவல்லி அக்காட்டின் நடுவில் அம்பிகை யாலயத்தில் "இனி என் செய்வது? எங்கு போவது? எவ்வாறு வாழ்வது?" என்று ஏங்கிக்கொண்டிருந்தாள். அடுத்துள்ள ஜயபுரம் என்ற நகரத்தை யரசாளுபவனுகிய ஜயசீலன் என்ற மன்னர் திலகன வேட்டையாடி இரவு அங்கொருபுறம கூடாரத்தில் தங்கி விடிந்ததும் பரிவாரங்களுடன் அவ்வழியே வந்தான. அவனைக் கண்டதும் அவள் நாணி கோயிலுக்குள் நுழைந்து ஒளிந்தாள். ஜயசீலன அம மாதரசைக்கண்டு திகைப்புற்ருன். "வனதேவதையோ? திருமகளோ? அயிராவணியோ?" என்று ஐயுற்ருன். பரிவாரங்களை நிறுததி கோயிலுட புகுந்தான. முத்துவல்லி அம்பிகையைப் போய் அணைத்துக்கொண்டாள். ஜயசீலன் கண்கள் இமைப்பதை மறநது அவளைக்கணடும் திருப்தி யடையவில்லை. "மாதரசே! நீ யார்? ஏன் இஙகு தனித்திருக்கின்றனை? நின் பேர் யாது?" என்று வினவினன். முத்துவல்லி நாணி, "தாங்கள் யார்?" என்ருள். மன்னன் "மடவரலே! நான் அடுத்துள்ள ஜயபுரத்தை யாளும மன்னன; என் பேர ஜயசீலன்; வேட்டையாடி வந்தேன. உன்னைக்கண்டு காதலுறுகினறேன். நான் இதுகாறும் பிரமசாரியாகவே இருந்தேன. ஆனல் உன்னிடம என் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டேன்" என்ருன. முத்துவல்லி, "அரசே! என் பேர் முத்துவல்லி; என் தாய இதோ இருக்கினற அம்பிகை; தாங்கள தூய்மையும் வாய்மையுமுடையவராயின் தங்கள் கருத்து நிறைவேறட்டும்" என்ருள். உடனே ஜயசீலன் அவளுடைய கரமலரைப் பிடித்தான். முத்துவல்லி அந்த இளங்குமரனுடைய கை பட்டவுடன மகிழ்ந்து சிறிது சிரித்தாள். உடனே பல முத்துக்கள் அவள் வாயினின்றும் சிந்தின. அந்த அற்புதத்தைக் கண்ட அரசன் அதிசயித்தான்; "என்னே புதுமை! இவள் வாயினின்றும் முத்துக்கள் உதிர்கின்றன" என்று அற்புத முற்ருன.

"பெண்ணரசே! நின் பேருக்கேற்ப நின் வாயினின்றும் முத்துக்கள் உதிர்கின்றனவே. நீ எனக்கு பட்டமகிஷியாக வா நான்

என்ன மாதவஞ் செய்தேனோ? புறப்படு" என்றான். முத்துவல்லி "அரசரேறே! இது என் தாய் உமாதேவியின் திருவருள்" என்று கூறி அம்பிகையைத் தொழுது அரசனுடன் தேரேறினாள். ஜய சீலன் அவளை யடைந்து அளவற்ற ஆனந்தமெய்தி பரிவாரங்களுடன் நகரம் போனான். எல்லா அரசர்களுக்கும் எல்லா பிரபுக்களுக்கும் மணவோலை யனுப்பினான். திருமணநாள் நிச்சயித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். அந்த நகரம் அமராவதிபோல் அழகு செய்யப்பட்டது. பற்பல அரசர்களும், பெரிய தனவந்தர்களும, புலவர்களும், மற்றும் பற்பலரும் அங்கு வந்து குழுமினார்கள்.

தங்கை மகளைக் காணாது மனம் புண்பட்டுக்கொண் டிருந்த கூடலீசரும், அவர் மனைவியும், வடிவழகியும் ஜயபுரத்திற்கு அரசன் திருமணங்காண கூட்டங்களோடு வந்திருந்தனர். ஆனால் திருமண மண்டபத்தில் நுழைதற்கு இயலாதவராகி ஒருபுறத்தில் ஒதுங்கி நின்றனர். திருமணம் மிகச்சிறப்பாக மீனாக்ஷி யம்மையாருக்கும் சோமசுந்தரப் பெருமானுக்கும் நடந்ததுபோல் நடைபெற்றது. மங்கலப் பாடல்களும், ஆடல்களும், பேரிகைகளும் முழங்கின. விண்ணவர் அமுதன விருந்து நடந்தது. விகடக் கச்சேரிகளும், வீணாகானங்களும், பழரசபானங்களும் பலப்பல இடங்களில நடந்தன. மாலை ஜயசீலனும முத்துவல்லியும் சகல விருதுகளுடன், சகல மேளதாளங்களுடனும் பவனி வந்தனர். அக்காட்சி கண்ணுக்கடங்காமல் கவின் செய்தது. ஒருபுறத்து நின்றிருந்த கூடலீசரும் அவர் மனைவியாரும் கண்டனர். கூடலீசருக்குப் பெருந்திகைப்பு ஏற்பட்டது. அரசன் பக்கத்திலிருப்பது தன் தங்கை மகள் முத்துவல்லி எனபதை யுணர்ந்தார். கனவோ என்று பார்த்தார். அவர் மனைவி பார்த்து தன்னால் துன்புறுத்தப்பெற்ற முத்துவலலி உலகமாளும அரசியாக இருப்பதைக்கண்டு கலக்கமும பொறாமையும் பயமும அடைந்தனள். தான் கிணற்றில் தள்ளிய முத்தவல்லி இப்போது அரசன் அருகில் மகாராணியாகப் பவனிவருவதை வடிவழகி கண்டு அற்புதம் எய்தினாள். முத்துவல்லியும் அவர்களைப பார்த்தாள். பவனி முடிந்தவுடன் அவர்களை தனியிலழைத்து தன் மாமன் கால்மீது விழுந்து அழுதாள். கூடலீசர், "அம்மா! உன் நல்லெண்ணம உன்னை உயர்த்தியது? இப்போது உன்னைத் தீண்டவும் நான அஞ்சுகின்றேன். நீடு வாழ்வாயாக" என்று வாழ்த்தினார். பின்னர் முத்துவல்லி மாமியைத் தொழுது வடிவழகியைத் தழுவினாள். மீண்டும கூடலீசரைப் பார்த்து "மாமா, தாங்கள் அன்று ஒருநாள் இவள் பெரிய பதவியிலிருக்கப்போகின்றாள் என்று என்னை வாழ்த்தினீரே! அந்த அருமைத் திருவாக்கு

இந்தப் பெருமையை எனக்கு அளித்தது" என்று கூறி அவா களுக்கு தனி மாளிகையும உணவுக்கு வேண்டியவைகளும் தந்து சுகமாக இருத்தினன.

ஐந்தாறு நாட்கள் கழிந்தன. திருமணச் சிறப்புகள் இனிது நிறைவேறியபின அவரவர்கள தத்தம் ஊருக்கு ஏகினா. ஒருநாள் முத்துவல்லி தன் மாமியைச் சநதித்தாள். ஏதோ வேடிக்கையாகப் பேசும்போது முத்துக்கள் உதிரந்தன. அதை அவள் கண்டு அதிசயித்து, "இபபடி உதிர்வதற்குக் காரணம் யாது?" என்று கேட்டாள். முதது வல்லி தன்னை வடிவழகி கிணற்றில் தளளியதும, தான அநத அமபிகை கோயிலுககுப போனதும, தலையை உடைகக முயன்றதும, அம்பிகை வரங கொடுத்ததும் ஆகிய வரலாறறைக கூறினள. அதைககேடட அவள மனம் ஆறாத ஆசையும் பொறாமையும் அடைநதது. தனியில் தன் மகளை யழைத்து அவளையும் அவ்வாறு செய்து வரம் வாங்கிவருமாறு அனுபபினள. வடிவழகி முததுவலலியிடம அமபிகை கோயிலிருககும இடந்தெரிநது குறிபபாக அங்கு போனுள். "தேவி! தாயே! உனபாதமே கதி. இனி உயிரை வைததிருகக மாடடேன" எனறு கூறி அமபிகை பாதத்தில் தலையை மோத முயனறுள. அம்பிகை, "தலையை உடைககாதே. நீ சிரிக்கும போதெலலாம உனககும உதிரும் பேன்" என்று அசரீரியாகச் சொன்னுள். உடனே வடிவழகி மகிழ்ந்து விரைநது தாயிடம வந்து சிரித்தாள். அவ்வளவுதான். குபீரெனறு அவள வாயினின்றும பல பேன்கள் உதிாநதன. இந்த விபரீதததைககண்டு அவள் தாய தேம்பி யழுதாள. அதனையறிநத கூடலீசா வந்து மகள வாயினின்று பேன உதிர்வதைக் கணடு வருநதினா. அங்கு முததுவலலியும வந்து விஷயமறிநது விசனிததாள. கூடலீசா என்ன நடநததென்று கேட்டாா. முத்துவலலி நடநதவை யாவும் கூறினுள். கூடலீசா, "சரிசரி. இவளுடைய துர்க்குணமே இவளுககுத் தகுந்த தண்டனையைததநதது" என்முா. அதுமுதல வடிவழகி சிரிப்பது கிடையாது. சிரித்தால் பேன உதிாந்து உடம்பில் கொட்டித் துன்புறுத்தும்.

முத்துவலலி தன் கணவனுடன சுகவாழ்வில் இன்புற்றுள அவளை மனைவியாகப்பெற்றதற்கு ஜயசீலன் பெரிதும்மகிழ்நதான் முத்துவல்லி தன் கணவனுடன் நாள்தோறும் அநேக நுண்மாண பொருள்களைப்பற்றி பேசியும், இனிய பாடலைப் பாடியும் அவனை மென்மேலும் இனபக்கடலில் முழுகவைத்தான். முருகனும் வள்ளியும்போல் ஜயசீ[illegible]வல்லியும் நெடுநாள் வாழ்நதனர்.

உ

முருகா

தீவினை அகற்று

வினை ; செயல் - அனுபவித்தல். வினை இருவகைப் படும். 1. நல்வினை. இது புண்ணியத்தால் வருவது. 2. தீவினை. இது பாவத்தால் வருவது. தீவினைக்கு "வல்வினை" என்றும் ஒரு பெயர் உண்டு. இத்தீவினை அதிக வலிமையுடையதாலும் எளிதில் அகற்ற முடியாததாலும் அதற்கு வல்வினை என்ற பெயர் வந்தது. அதை அகற்றுவது எப்படி ?

இறைவழிபாடு செய்வதாலும், பெரியோர்களுக்கு இதமாக நடப்பதாலும், வறியவருக்கு உதவுவதாலும் தீவினையை அகற்றலாம். மென்மேலும், இறைவழிபாட்டையும், பெரியோர்கள் குறிப்பறிந்து அவர்கள் விருப்பப்படி ஒழுகுவதையும், வறியவர்களின் பசிக்கு உணவு கொடுப்பதையும் விடாது நடத்திவந்தால் புண்ணியப்பேறும் எய்தலாம்.

தவிர, முந்திய பிறப்பில் நாம் தீவினை செய்திருந்தால் அது எப்படியும் நம்மிடம் வரும். அதையும் நம்மிடம் வராமல் தடுக்கலாம். எப்படியெனில் ? ஆண்மக்கள், இறைவழிபாட்டுடன், தாய், தந்தை, குருநாதர் முதலிய பெரியவர்களின் குறிப்பறிந்து அவர்கள் மகிழும் வண்ணம் நடப்பதாலும், பெண்மக்கள் இறைவழிபாட்டுடன், கணவர், மாமி, மாமன், குருநாதர் முதலியவர்களின் குறிப்பறிந்து தம் கடமைகளைத் தவறாமல் செய்வதாலும் வல்வினையாகிய தீவினையை அகற்றி தாங்களும் தங்கள் வழித்தோன்றும் மக்களும் புண்ணியப்பேறடைவார்கள் என்பது திண்ணம். ஆகவே திருப்புகழமிர்தத்தை வாசிக்கும் பெண்மக்களும், ஆண்மக்களும் மேற்கூறியவாறு ஒழுகி தீவினைகளை அகற்றி புண்ணியப் பேறடைய ஆலவாய்க் கடவுளாகிய ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரரை அனுதினமும் பிரார்த்தனை செய்கிறேன்.

இங்ஙனம்,
ஒரு சந்தாதாரர்.

உயர்ந்த வேலைப்பாட்டுக்குக் காரண்டி
அசல் வெள்ளிசாமான்களும், வெள்ளி நகைகளும்
உத்திரவாதத்துடன் கிடைக்கும் இடம்.

வ. ரு. புருஷோத்தம செட்டியார்

தங்கம், வெள்ளி நகை வர்த்தகம்
(பூஜைக்குகந்த வெள்ளி உருவப் படங்களும் கிடைக்கும்.
நெ. 47 சைனாபஜார் ரோட்டு, சௌகார்பேட்டை, மதருஸ்)

வெகு சரசம்! உத்திரவாதம்!!

எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும்
பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை,
பட்டு-சேலை தினுசுகள்
சாயத்திற்கும் ஜரிகைக்கும்
உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.
வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்

எஸ். ஆர். ஆதிநாராயண முதலியார்,
எஸ். எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார்.

பட்டுஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பிதெரு, சின்னகாஞ்சிபுரம

நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.





சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54 பந்தர்தெரு, மதராஸ.

Edited by Thirumuruga KIRUPANANDAVARI; Printed & Published by M. MADHUSOODANA SIVAM, at the THIRUPPUGAL AMIRTHAM PRESS: Kangayanellur, Via Katpadi. N. A.